**<u>மோட்டார் வாகன விபத்துக்கள் நஷ்டஈடு கோருரிமை தீர்ப்பாயம்/</u>**
**<u>தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரியலூர்.</u>**

**முன்னிலை:**திருமதி.V.தீபா, எம்.எல்.,
மோட்டார் வாகன விபத்துக்கள் நஷ்டஈடு கோருரிமை
தீர்ப்பாய நீதிபதி/தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அரியலூர்.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் நாள் வியாழக்கிழமை

**<u>M.C.O.P.NO. 9/2024</u>**

**(CNR No.TNAL 04-001370-2024)**

மனோன்மணி, வயது 59/2024,
க/பெ.கோவிந்தசாமி,
வடக்குத்தெரு, குருவாடி கிராமம்,
குருவாடி – மஜிரா,
அரியலூர் வட்டம்,
அரியலூர் மாவட்டம். ... மனுதாரர்.

-எதிராக-

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
கும்பகோணம். ... எதிர்மனுதாரர்.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 08.07.2026-ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ப.தேவேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.காந்திதுரை அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதவுரைகள் கேட்கப்பட்டும், இதுநாள் வரையில் எனது சீரிய பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர் தனக்கு சாலை விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கேட்டு மோட்டார் வாகன சட்ட பிரிவுகள் 164(A) மற்றும் 166-ன்கீழ் கடந்த 23.02.2024-ம் தேதியன்று இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.07.23 16:38:45 +0530

**1. மனுவின் சுருக்கம்.**

| | |
|---|---|
| a.மனுதாரரின் வயது, தொழில் மற்றும்வருமானம் :– | மனுதாரர் மனோன்மணி, வயது 58, விவசாயக்கூலி வேலை செய்து மாதம் ரூ.20,000/– சம்பாதித்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார். |
| b. விபத்து சம்பவ இடம், நாள் மற்றும் நேரம் :– | கடந்த 04.05.2018–ம் தேதியன்று காலை சுமார் 10.45 மணியளவில் அரியலூர் – கைகாட்டி ரோடு அஸ்தினாபுரம் பெட்ரோல் பங்க் அருகில் விபத்து நடந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். |
| c. குற்ற வழக்கு விபரம் :– | கயர்லாபாத் காவல் நிலைய குற்ற எண். 79/2018, இ.த.ச பிரிவுகள் 279, 337. |
| d.காயத்தின் விபரம் :– | மனுதாரருக்கு விபத்தினால் பல் உடைந்துள்ளதாகவும், வலது பக்க நெற்றி, தலை மற்றும் உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். |
| e. சிகிச்சை விபரங்கள் :– | மனுதாரர் விபத்திற்குட்பட்டவுடன், அரியலூர் செந்தில்நாதன் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைப் பெற்று பின்ன அரியலூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும், தொடர்ந்து தஞ்சாவூர் வாஞ்சிலிங்கம் மருத்துவமனையிலும், அரியலூர் கோல்டன் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார். |
| f. சம்பவ விபரங்கள் :– | மனுதாரர் கடந்த 04.05.2018 ம் தேதியன்று எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 45 N 3822 என்ற பதிவெண் கொண்ட பேருந்தில் பயணியாக பயணம் செய்துக் கொண்டிருக்கும்போது, மேற்படி பேருந்தை ஓட்டிய ஓட்டுநர் |

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.07.23 16:38:51 +0530

| | |
|---|---|
| | அஸ்தினாபுரம் பெட்ரோல் பங்க் எதிரில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த பேருந்து ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் வாகனத்தை ஓட்டிச் சென்ற போது, பெட்ரோல் பங்கிலிருந்து வடக்கிலிருநது தெற்கு நோக்கி வந்த இரு சக்கர வாகனத்தில் வந்த நபர் குறுக்கே வந்ததால் மேற்படி பேருந்து ஓட்டுநர் திடீரென பிரேக் போட்டதால் பேருந்தின் உள்ளே நின்றுக் கொண்டிருந்த மனுதாரர் முன்பக்க வாசல்படி வழியாக கீழே விழுந்து விபத்து ஏற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். |
| g. மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு தொகை :- | ரூ. 10,00,000/- |

**2. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்.**

i. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் உண்மைக்கு புறம்பானது என்றும், இந்த எதிர்மனுதாரரால் எதிருரையில் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் எனவும், மனுதாரரின் மனு சட்டப்படி நிலைக்கதக்கது அல்ல என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ளதுபோல் விபத்து நடைபெறவில்லை.

ii. 04.05.2018 அன்று எதிர்மனுதாரரின் TN 45 N 3822 என்ற பதிவு எண் கொண்ட பேருந்து, ஓட்டுநரால் மிகுந்த கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் வைப்பூரிலிருந்து அரியலூருக்கு இயக்கப்பட்டதாகவும், காலை சுமார் 10.50 மணியளவில், இப்பேருந்து மண்டையன்குறிச்சி கிளைச் சாலையில் சென்றுக் கொண்டிருந்தபோது, ஓட்டுநர் பேருந்தை மெதுவான வேகத்தில் இயக்கிக்கொண்டிருந்ததாகவும், அப்போது, இருசக்கர வாகன ஓட்டி திடீரென சாலையைக் கடக்க முயன்றபோது, ஒரு பெரிய விபத்தைத்

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.07.23 16:38:57 +0530

தவிர்க்கும் பொருட்டு, பேருந்து ஓட்டுநர் உடனடியாகத் தடையைச் (brake) செயல்படுத்தியதாகவும், பேருந்தில் எந்தவொரு பிடியையும் (railing) பற்றிக்கொள்ளாமல், கவனக்குறைவாகவும் தூக்க நிலையிலும் அமர்ந்திருந்த மனுதாரர், தனது சொந்த கவனக்குறைவு காரணமாகச் சமநிலையை இழந்து பேருந்தின் முன்பக்கப் படிக்கட்டிலிருந்து கீழே விழுந்ததாகவும், மிகுந்த கவனத்துடன் பயணம் செய்யுமாறு நடத்துநர் பயணிகளை எச்சரித்திருந்த போதிலும், ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மனுதாரர் முறையாக அமர்ந்து பயணம் செய்வதில் கவனம் செலுத்தவில்லை என்றும், மேற்படி விபத்திற்கு இதுவே காரணம் என்றும், மேலும், பேருந்து முழுமையான பயணிகள் எண்ணிக்கையுடன் இயக்கப்பட்டதாகவும், மனுதாரரைத் தவிர வேறு யாரும் பேருந்திலிருந்து கீழே விழவில்லை என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியம் என்றும், பல பயணிகள் பயணம் செய்தபோதிலும், வேறு யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், கவனக்குறைவாகவும் ஆழ்ந்த உறக்கத்திலும் நிலையற்ற நிலையில் பயணம் செய்ததாலேயே மனுதாரருக்குக் காயம் ஏற்பட்டதாகவும், இதுவே விபத்துக்கான காரணமாக அமைந்ததாகவும், எதிர்மனுதாரரின் ஓட்டுநர் பேருந்தை அஜாக்கிரதையாகவோ அல்லது அதிவேகமாகவோ இயக்கியிருந்தால், பல பயணிகள் காயமடைந்திருக்கக்கூடும் அல்லது பலர் பேருந்துக்குள் கீழே விழுந்திருக்கக்கூடும் என்றும், ஆனால், இந்த வழக்கில், ஆழ்ந்த உறக்கம் காரணமாகப் பேருந்தின் பின்பகுதியில் கவனக்குறைவாக அமர்ந்திருந்த மனுதாரர் மட்டுமே பேருந்துக்குள் கீழே விழுந்ததாகவும், எனவே, இந்த விபத்து நிகழ்ந்ததற்கு மனுதாரரே பொறுப்பாவார்.

iii. எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்டிருப்பது மட்டுமே, விபத்து ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்ற முடிவுக்குத் தீர்ப்பாயம் வருவதற்குப் போதுமான ஆதாரமாக அமையாது. "National Insurance Co., Ltd., Vs Islavath Chinnamma and others" 2007

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.07.23 16:39:03 +0530

ACJ 1529(A.P.High Court) என்ற தீர்ப்பளிக்கப்பட்ட வழக்கில், முதல் தகவல் அறிக்கையில் உள்ள விவரங்களை அத்தகைய விஷயத்திற்கான உறுதியான ஆதாரமாகக் கருதக்கூடாது என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்து அல்லது அதனால் ஏற்பட்ட மரணம் அல்லது காயங்கள் நிகழ்ந்துள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதோடு மட்டுமே அதன் முக்கியத்துவம் பெரும்பாலும் வரையறுக்கப்படுகிறது. "National Insurance Co., Ltd., Vs P.Murugan and others" reported in 2009 ACJ 2411 என்ற வழக்கில், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளபடி, ஒரு குறிப்பிட்ட வாகன ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்டிருப்பதாலேயே, விபத்துக்கான முழுப் பொறுப்பும் அந்த ஓட்டுநரின் மீதே சுமத்தப்பட வேண்டும் என்ற கட்டாய விதி ஏதுமில்லை. இந்த எதிர்மனுதாரரின் ஓட்டுநர், சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் அந்தக்குற்றவியல் வழக்கைச் சிறப்பாக எதிர்கொண்டு வருகிறார். விபத்து நடந்தபோது இந்த எதிர்மனுதாரரின் ஓட்டுநர் கவனக்குறைவாகச் செயல்பட்டார் என்பதை நிரூபிக்க, சாட்சியச் சட்டத்தின் பொதுவான கோட்பாடுகளின்படி, முதல் தகவல் அறிக்கையை அளித்த நபர் அல்லது அதைத் தயாரித்த அதிகாரியை விசாரித்துத் தகுந்த ஆதாரங்களை முன்வைக்குமாறு மனுதாரர் வலியுறுத்தப்பட வேண்டும்; ஏனெனில், விபத்து நிகழ்ந்ததற்குக் காரணமானதில் இந்த எதிர்மனுதாரருக்கு எவ்விதப் பொறுப்பும் இல்லை.

iv. காவல் துறை முதல் தகவல் அறிக்கை என்பது குற்றம் நிகழ்ந்துள்ளது என்பதை உறுதிப்படுத்த செய்யப்படும் அறிக்கை என்றும், அதில் அய்யாப்பாட்டிற்குரிய குற்றவாளி என்னும் இடத்தில் கழக ஓட்டுநர் பெயர், இடம் பெற்றுள்ளதை காரணமாக கூறி அவேர விபத்திற்கு காரணம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்திடக்கூடாது என்றும், மனுதாரரின் தொழில், வயது, வருமானம், காயத்தின் தன்மை மற்றும் சிகிச்சை விவரங்கள்

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.07.23 16:39:08 +0530

ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும், மனுதாரர் பல்வேறு தலைப்புகளின்கீழ் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றும், மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியவை.**

1. யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது?
2. மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்பானவர்கள் யார்?
3. மனுதாரருக்கு கிடைக்க கூடிய இழப்பீடு தொகை எவ்வளவு?

**4. பிரச்சனை –1 க்கான தீர்வு**

1. இரு தரப்பிலும் கற்றறிந்த வழக்கறிஞர்கள் அவரவர்கள் வழக்குரையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் வாதிட்டார்கள். மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 விசாரிக்கப்பட்டுள்ளார். சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

2. மனுதாரர் தனது மனு மற்றும் சாட்சியத்திலும் கடந்த 04.05.2018 ம் தேதியன்று எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 45 N 3822 என்ற பதிவெண் கொண்ட பேருந்தில் பயணியாக பயணம் செய்துக் கொண்டிருக்கும்போது, மேற்படி பேருந்தை ஓட்டிய ஓட்டுநர் அஸ்தினாபுரம் பெட்ரோல் பங்க் எதிரில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த பேருந்து ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் வாகனத்தை ஓட்டிச் சென்ற போது, பெட்ரோல் பங்கிலிருந்து வடக்கிலிருநது தெற்கு நோக்கி வந்த இரு சக்கர வாகனத்தில் வந்த நபர் குறுக்கே வந்ததால் மேற்படி பேருந்து ஓட்டுநர் திடீரென பிரேக் போட்டதால் பேருந்தின் உள்ளே நின்றுக் கொண்டிருந்த மனுதாரர் முன்பக்க

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.07.23 16:39:13 +0530

வாசல்படி வழியாக கீழே விழுந்து விபத்து ஏற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

3. அதே விவரத்தையே நீதிமன்ற சாட்சியத்திலும் கூறியுள்ளார். விபத்து நடந்தவுடன் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1ல் TN 45 N 3822 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநர் பிரபாகரன் என்பவரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பு சாட்சியை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் பேருந்து நடத்துனர் ரவிச்சந்திரன் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் எதிருரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார்.

4. மேற்படி எ.ம.சா.1–ஐ மனுதாரர் தரப்பில் செய்யப்பட்டுள்ள குறுக்கு விசாரணையில் கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார். "04.05.2018 அன்று நான் நடத்துனராக பணிபுரிந்த வாகனத்தின் ஓட்டுநராக பிரபாகரன் இருந்தார். கயர்லாபாத் போலீசார் மேற்படி பிரபாகரன் மீது குற்ற எண்.79/2018 ல் வழக்கு பதிவு செய்திருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. விபத்து நடந்தது மண்டையன்குறிச்சி கீழமேல் சாலை என்றால் சரிதான்" குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

5. மேற்படி வழக்கின் சாட்சியத்தையும், வழக்கின் சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுநர் அஜாக்கிரதையாக பேருந்தை ஓட்டியபோது விபத்து ஏற்பட்டுள்ளதாக ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எ.ம.சா.1–ன் சாட்சியத்தினை உறுதிபடுத்தும் வகையில் பேருந்தில் பயணம் செய்த பயணிகள் அல்லது சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிய ஆதாரமும் ஆவண ஆதாரமும் இல்லை.

6. ம.சா.ஆ.1 ஆவணமானது மனுதாரர் தரப்பு சாட்சியத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.07.23 16:39:18 +0530

7. எதிர்மனுதாரர் தரப்பில் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுதாரர் விபத்து குறித்தும், விபத்து நடந்த விதம் குறித்தும் முதல் விசாரணையில் அளித்துள்ள சாட்சியத்தை முரண்படுத்தும் விதமாக குறுக்கு விசாரணையில் சங்கதிகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ம.சா.1 ன் சாட்சியும் மற்றும் ம.சா.ஆ 1 சான்றாவணத்திலிருந்து எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது நிருபிக்கப்பட்டுள்ளது. எ.ம.சா1 ன் சாட்சியத்தினை உறுதிப்படுத்தும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி ஆதாரமோ ஆவண ஆதாரமோ தாக்கல் செய்யவில்லை. மனுதாரரின் சாட்சியத்தினை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் ஆவண ஆதாரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மனுதாரர் தரப்பு ஆவணங்களின் அடிப்படையிலும், சாட்சியத்தின் அடிப்படையிலும் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் மட்டுமே இந்த விபத்து ஏற்பட்டது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**5. பிரச்சனை – 2 க்கான தீர்வு**

விபத்தானது எதிர்மனுதாரர் பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டதாக பிரச்சனை.1 ல் முடிவு செய்யப்பட்ட நிலையில் எதிர்மனுதாரர் மேற்படி பேருந்து ஓட்டுநரின் முதல்வர் என்ற முறையில் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயத்திற்காக எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்பானவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**6. பிரச்சனை– 3 க்கான தீர்வு**

1. விபத்து சமயத்தில் மனுதாரர் மனோன்மணி, வயது 58, விவசாயக்கூலி வேலை செய்து மாதம் ரூ.20,000/– சம்பாதித்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார். பொதுவாக விவசாயக்கூலி வேலைக்கு ஆவண ஆதாரங்கள் தாக்கல் செய்ய இயலாது. மனுதாரரின் காயத்தின் தன்மை மற்றும் சிகிச்சை விவரங்களை காண்பிக்கும் வகையில் ம.சா.ஆ.2

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.07.23 16:39:23 +0530

ஆவணமான புறநோயாளி பிரிவு சீட்டுகளையும், ம.சா.ஆ.3 ஆவணமான விடுவிப்பு சான்றையும், ம.சா.ஆ.4 ஆவணமான சிகிச்சை விவரங்கள் அடங்கிய நோட்டையும், ம.சா.ஆ.5 ஆணமான மருத்துவரின் பரிந்துரை சீட்டுகளையும் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 04.05.2018 முதல் 19.05.2018 வரை உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்றுள்ளது ம.சா.ஆ.3 ஆவணமான விடுவிப்பு சான்றிலிருந்து தெரியவருகிறது. மனுதாரர் மீண்டும் மேற்படி மருத்துவமனையில் 05.02.2019 அன்று புறநோயாளியாக சிகிச்சைப் பெற்றுள்ளது ம.சா.ஆ.4 ஆவணத்திலிருந்து தெரியவருகிறது. மனுதாரர் 24.05.2018, 07.06.2018, 31.08.2018, 13.09.2018, 30.01.2019, 06.05.2019, 21.09.2019 ஆகிய தேதிகளில் புறநோயாளியாக சிகிச்சைப் பெற்றுள்ளது ம.சா.ஆ.5 ஆவணத்திலிருந்து தெரியவருகிறது. மனுதாரருக்கு விபத்தினால் தலையில் காயம் ஏற்பட்டு சிகிச்சைப் பெற்றுள்ளது மேற்படி ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது.

2. மனுதாரருக்கு மேற்படி மருத்துவமனையில் மருத்துவ செலவாக ரூ.57,533/- செலவு செய்ததாக ம.சா.ஆ.6 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.6 ஆவணத்தினை பரிசீலனை செய்து பார்க்கும் போது மேற்படி ஆவணத்தின் மூலம் மனுதாரருக்கு மருத்துவ செலவாக ரூ.57,533/- கிடைக்கதக்கதாகும்.

3. மனுதாரரின் ஊனச்சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை.

4. மனுதாரரின் வயது, தொழில், சிகிச்சை விவரங்கள், காயத்தின் தன்மையைக் கருத்தில் கொண்டு பின்வருமாறு இழப்பீடு வழங்க நீதிமன்றம் முடிவு செய்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | வலி மற்றும் துன்பத்திற்காக | ரூ. 30,000 |
| 2. | ஊட்டச்சத்து உணவிற்காக | ரூ. 10,000 |
| 3. | சிகிச்சை சமயத்தில் உடன் இருந்தோர் | ரூ. 5,000 |

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.07.23 16:39:29 +0530

| | | |
|---|---|---|
| | செலவாக | |
| 4. | விபத்தினால் ஏற்பட்ட வசதி குறைவு | ரூ. 15,000 |
| 5. | ஆடை அணிகலனுக்கான | ரூ. 2,000 |
| 6. | மருத்துவமனை சென்று வந்த போக்குவரத்து செலவு | ரூ. 5,000 |
| 7. | மருத்துவ செலவு | ரூ. 57,533 |
| | மொத்தம் | ரூ. 1,24,533 |

**7. முடிவாக,**

1) இந்த மனு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2)மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத்தொகையான ரூ.1,24,533/-ல் (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து ஐநூற்று முப்பத்து மூன்று மட்டும்) எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும் என்றும்,

3) மேற்படி இழப்பீட்டுத்தொகைக்கு மனு தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரையிலும் 7.5% வட்டி சேர்த்து விகிதாசார செலவு தொகையுடன் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும் என்றும்,

4) மேற்படி மனு இடையில் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்தக் காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தகக்கதல்ல என்றும்,

5) மேற்படி இழப்பீட்டுத்தொகையினை இவ்வுத்தரவு நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கான **(Chief Judicial Magistrate, Ariyalur, Account No.43147273653, State Bank of India, ACB branch(Mela Agraharam), Ariyalur, IFSC code SBIN0000807)** க்கு E-Transfer மூலம் செலுத்தி வைத்து அதுகுறித்து குறிப்பு மற்றும் பேங்க் அட்வைசுடன் கடிதம் மூலம் தீர்ப்பாயத்திற்கும் அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்ப வேண்டும் என்றும்,

6) மேற்படி தொகை முழுவதுமாக மனுதாரர் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என்றும்,

7) வழக்கறிஞர் ஊதியம் ரூ.9,727/- அவரது வங்கி கணக்கிற்கு E-Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும் என்றும்,

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.07.23 16:39:34 +0530

8) மேற்படி நஷ்ட ஈட்டுக்குரிய நீதிமன்றக் கட்டணம் ரூ.618.83/-ல் ஏற்கனவே செலுத்திய நீ.ம.க.ரூ.372.50/- போக எஞ்சியுள்ள நீ.ம.க.ரூ.245.00/-ஐ இவ்வுத்திரவு பிறப்பிக்கப்பட்ட 15 தினங்களுக்குள் மனுதாரர் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடுப்படுகிறது.

## COST LIST FOR THE PETITIONERS

| S.No | Particulars | Petitioners | Respondent |
|---|---|---|---|
| | | Rs. Ps. | Rs. Ps. |
| 1. | Stamp on petition | 372.50 | - |
| 2. | Vakalath | 10.00 | - |
| 3. | Stamp on documents | 25.00 | - |
| 4. | Advocate Fees | 9,727.00 | - |
| 5. | Preparation on petition | 200.00 | - |
| | **Total** | **10,334.50** | **-** |

*என்னால் இந்த உத்தரவு சுருக்கெழுத்துத்தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 23-ஆம் தேதியன்று அவையறியப் பகரப்பட்டது.*

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.07.23 16:39:40 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் நஷ்டஈடு கோருரிமை தீர்ப்பாயர் ( தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்), அரியலூர்.

**மனுதாரர் தரப்பு சாட்சி :-**

ம.சா.1 – திரு.மனோன்மணி(மனுதாரர்).

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-**

ம.சா.ஆ.1 – முதல் தகவல் அறிக்கை நகல்.

ம.சா.ஆ.2 – மனுதாரரின் புறநோயாளி பிரிவு சீட்டு.

ம.சா.ஆ.3 – மனுதாரரின் விடுவிப்பு சான்றின் ஒளிநகல்.

ம.சா.ஆ.4 – மனுதாரரின் சிகிச்சை விவரங்கள் அடங்கிய நோட்டின் ஒளிநகல்.

ம.சா.ஆ.5 – மருத்துவரின் மருத்துவ பரிந்துரை சீட்டுகள்.

ம.சா.ஆ.6 – மருத்துவ பில்கள்.

ம.சா.ஆ.7 – மனுதாரரின் ஆதார் அட்டையின் ஒளிநகல்(அசலுடன் சரிபார்க்கப்பட்டது).

ம.சா.ஆ.8 – மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் ஒளிநகல்(அசலுடன் சரிபார்க்கப்பட்டது).

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :–**

எ.ம.சா.1 – திரு.ரவிச்சந்திரன்.

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–**

இல்லை

**நீதிமன்ற சான்றாவணம் :–**

இல்லை

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.07.23 16:39:47 +0530

மோட்டார் வாகன விபத்துக்கள் நஷ்டஈடு கோருரிமை தீர்ப்பாயர் (தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்),
அரியலூர்.